**செய்தி வெளியீடு எண்:814**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

<u>**செய்தி வெளியீடு – 22.09.2010**</u>

மதுரை மண்டலத்திலுள்ள தனியார் குருதி வங்கிகள் மருந்து கட்டுப்பாடு துறை மருந்து ஆய்வாளர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது மதுரை, சிவகங்கை சாலை, எண்.101/1–இல் செயல்படும் ‘‘விக்னேஷ் குருதி வங்கி’’யின் செயல்பாட்டில் சில முக்கியமான குறைபாடுகள் காணப்பட்டன. எனவே அந்த குருதி வங்கியின் 2008–2012 ஆண்டிற்கான குருதி உரிமம் புதுப்பித்தல் மனுவை ஏன் நிராகரிக்கக்கூடாது என காரணம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மருந்து மற்றும் அழகு சாதன சட்ட விதி 122–0–ன் படி குருதியை சேமிக்கவும், விநியோகம் செய்யவும் அக்குருதி வங்கிக்கு தடை விதித்து மருந்து கட்டுப்பாடு இயக்குநரால் ஆணையிடப்பட்டுள்ளது.

வி.கு. சுப்புராஜ்,
அரசு முதன்மைச் செயலாளர்

**************

**<u>வெளியீடு:–</u> இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**